# ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டமானது 08.02.2024 (வியாழக் கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளவேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம்நகராட்சி

நாள்.08.02.2024

| பொருள் எண் | மன்ற பொருள் | கூட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | 1. Resolved that the Oddanchatram Municipality is authorised to borrow a loan amount of Rs:241.57 Lakhs for "Conversion of existing street lights into energy efficient LED lights (2451Nos)" from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed byG.O.(Ms)No.145, MA&WS (MA2) Dept., dated 14-10-2022.<br>2. Resolved that the Oddanchatram Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Oddanchatram Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Oddanchatram Municipality.<br>3. Resolved that the Oddanchatram Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed/ to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.<br>4. Resolved that the Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other moniesdue for the loan availed for this project proposal to TUFIDCO.<br>5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Oddanchatram Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project. | **தீர்மான எண்.52**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 6. The Oddanchatram Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect thetimely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis. | |

**(ஓம்)கதிருமலைசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**ஒட்டன்சத்திரம்நகராட்சி**

**//உண்மைநகல்//**

**ஆணையாளர்**
**ஒட்டன்சத்திரம்நகராட்சி**

## ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டமானது 23.02.2024 (வெள்ளிக் கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும்தவறாது கலந்துகொள்ளவேண்டுமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம்நகராட்சி

நாள்.23.02.2024

| பொருள் எண் | மன்ற பொருள் | கூட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | அரசாணை(4D) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.12.2022-ன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-23-ன் கீழ் ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட் வளாக கடைகள் மற்றும் இதர இனங்கள் கட்டிடப் பணிகள் மேற்கொள்ள (KNMT பங்கு தொகை ரூ..1063.00 மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.1062.00 இலட்சம் ) என மொத்த மதிப்பீடு தொகை ரூ.2125.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவின்படி, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, 23.12.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 05.01.2023-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.<br>இந்நிலையில், தற்போது மேற்படி கட்டுமான பணிகள் 50 சதவீதத்திற்கு மேல் முடிவுற்ற நிலையில், இந்நகராட்சி பொறியாளரின் குறிப்பின்படி, ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய பட்டியல் தொகைகள் KNMT பங்கு தொகை பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்கி வந்த நிலையில், மீதமுள்ள பட்டியல் தொகை நகராட்சி பங்களிப்பு தொகையிலிருந்து வழங்க வேண்டியிருப்பதால், நகராட்சி நிதிநிலை கருதியும், பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியதன் அவசியம் கருதியும், மேற்படி பணிக்கான திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நகராட்சி கணக்கீட்டு தொகையினை ஈடு செய்யும் பொருட்டு, மேற்படி கடைகள் மற்றும் இதர இனங்களுக்கு முன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளிகோர நடவடிக்கை மேற்கொள்ள , மேற்படி இனங்களுக்கு வைப்புத் தொகை நிர்ணயம் செய்து நகர்மன்ற தீர்மான எண்.330, நாள்.30.10.2023ன்படி, நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இனங்களுக்கு 22.12.2023ல் முன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்புதுறை சென்னை மூலம் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பர வெளியீடு செய்யப்பட்டது மேற்படி தேதிய முன்பொதுஏலத்தில்கலந்துகொள்ள 18.12.2023-ல் இரண்டு நபர்கள் இரண்டு | **தீர்மான எண்.53**<br>அனுமதிக்கப்பட்டது |

கடைகளுக்கு மட்டும் வைப்பு தொகை செலுத்தப்பட்டநிலையில், 20.12.2023-ல் மேற்படியார்களால் கடைகள் மற்றும் அலுவலக அறைகளுக்கான வைப்புத் தொகை மற்றும் வாடகை தொகை கூடுதலாக உள்ளதென தெரிவித்து முன்பொதுஏல வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரி கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து, மேற்படியார்களின் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட்டது. 22.12.2023-ல் முன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளாத நிலையில், மேற்படி இனங்களுக்கு 19.01.2024 மற்றும் 08.02.2024 ஆகிய தேதிகளில் மறுமுன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்புதுறை, சென்னை மூலம் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பர வெளியீடு செய்யப்பட்டது. மேற்படி தேதிகளில் மறுமுன்பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளியிலும்எவரும் கலந்துகொள்ளவில்லை

அதனை தொடர்ந்து, நான்காவது அழைப்பாக மேற்படி இனங்களுக்கு 21.02.2024-ல் மறுமுன்பொதுஏலம் / நேரடி மற்றும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்புதுறை, சென்னை மூலம் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பர வெளியீடு செய்யப்பட்டது மேற்படி 21.02.2024-ம் தேதியில் பொதுஏலம் / நேரடி மற்றும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளில் எவரும் கலந்துகொள்ளவில்லை மேற்காணும் இனங்களுக்கான ஏலம் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நபர்களால் தரைதள கடைகள், முதல்தள அலுவலக அறைகள் மற்றும் இதர இனங்களுக்கான வைப்புத் தொகை மற்றும் வாடகை தொகையினை குறைத்து நிர்ணயம் செய்வதோடு, தரைதள கடைகள் மற்றும் முதல்தள அறைகள் தொடர்புப்படுத்தப்படாமல் தனித்தனியாக ஏலம் விடவும் தெரிவிக்கிறார்கள்.

இந்நிலையில், காந்தி மார்க்கெட் கட்டிட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதால், ஒப்பந்ததாரருக்கு 50 சதவீத திட்ட நிதி நீங்கலாக மீதமுள்ள 50 சதவீத தொகையினை நகராட்சி பங்களிப்பாக ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டியுள்ளதாலும், இந்நகராட்சியின் வருவாயினை கருதி, மேற்படி கட்டிடப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு, மேற்படி கடைகள் மற்றும் இதர இனங்களுக்கான வைப்புத் தொகை வரவாக்கம் தவிர்க்க இயலாததாக உள்ளதால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.4302/ஆர்2/2024, நாள்.23.02.2024-ல், மேற்படி வளாகத்தில் கட்டப்படும் கடைகள் மற்றும் அலுவலக அறைகள் தனித்தனியாக ஏலம் கோருவதற்கும், கடைகள் மற்றும் இதர இனங்களுக்கான வைப்புத் தொகை மற்றும் வாடகை தொகையினை சீராய்வு செய்து ஏலம் மறுநிர்ணயம் செய்து உரிய உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இனங்களுக்கு மறுமுன்பொதுஏலம் / நேரடி மற்றும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்புதுறை, சென்னை மூலம் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் விளம்பர வெளியீடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்படி திட்டப் பணியினை விரைந்து முடித்திடும் பொருட்டு , இந்நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியாளரின் குறிப்பின்படி, மேற்படி காந்தி மார்க்கெட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைகளை மறுமுன்ஏலம் (Pre-Aution) நடத்தி வைப்புத் தொகைகள் மற்றும் மாத வாடகைகள் முன் பணமாக ஏலதாரர்களிடம் இருந்து பெற்றிட நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம் .<br>3. மேற்காணும் புதிதாக கட்டப்பட்டு வரும் கடைகளை மறுமுன்பொதுஏலம் விடுவதற்கு, ஏல அறிவிப்புகள், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தல் மற்றும் தொடர்பான இதர பணிகளுக்கான அதற்கான செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | |
| 2 | ஒட்டன்சத்திரம் நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதிகளின் 2023-2024-ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு / செலவு அறிக்கை (Revised Budget) மற்றும் 2024-2025-ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு / செலவு அறிக்கை (Budget) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் மன்றத்தின் வைக்கப்படுகிறது<br>**அலுவலககுறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.999/2022/பி1) | **தீர்மான எண். 54**<br>அனுமதிக்கப்பட்டது |

(ஓம்)கதிருமலைசாமி,
நகர்மன்றத் தலைவர்,
ஒட்டன்சத்திரம்நகராட்சி

// உண்மைநகல் //

ஆணையாளர்
ஒட்டன்சத்திரம்நகராட்சி